பக்கங்கள் 16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 27 திங்கட்கிழமை 12.08.2024 | அதிர்வு 010

## ஜயம்பதியும் சஜித் பக்கம்



ஜனாதிபதி சட்டத்தரணியும் அரசமைப்பு விவகார நிபுணருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்னவும் வரும் ஜனாதிபதி தேர்தலில்

05▶



### பொது வேட்பாளராகக் களத்தில் குதிக்கும்

# அரியநேத்திரன் மீது தமிழரசு நடவடிக்கை

## கட்சிக் கூட்டங்களுக்கு அழைக்காதிருக்கவும் எழுத்தில் விளக்கம் கோரவும் மத்தியகுழு முடிவு

(ந.லோகதயாளன்)

கட்சியின் அனுமதியின்றி பிற தரப்புகளின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அரியநேத்திரன் தொடர்பில் இறுக்கமான நடவடிக்கை எடுக்க தமிழரசுக் கட்சி ஏகமனதாக முடிவெடுத்துள்ளது.

05▶

## சமஷ்டிக்கு இணங்கும் வேட்பாளருடன் அதுபற்றிப் பேசி முடிவெடுக்கத் தயார்!

### நேற்றைய வவுனியாக் கூட்டத்தின் பின் சிறிதரன் தெரிவிப்பு



(ந.லோகதயாளன்)

சரியான விடயத்தை தென்னிலங்கை வேட்பாளர்கள் முன் வைத்தால் அது தொடர்பிலும் பரிசீலிக்கத் தயார் என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றைய தினம் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன் நிறைவில் செய்தியாளர்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கு யார் இணங்கி வந்தாலும் அவர்களுடன் சேர்ந்து அது பற்றி நாம் பரிசீலிக்கத் தயார் எனபது

05▶



கிழக்கு மாகாண எம்.பிக்கள் இடையே காய்ச்சல். கடுமையாக நிலவுகின்றது.

ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க கிழக்கில் சாணக்கியன் எம்.பி. சமர்ப்பித்த சுமார் 60 கோடி ரூபா பெறுமதியான நிதித் திட்டங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார் என்று மற்ற எம்.பிக்கள் சீறிச் சினந்து கொண்டிருக்கின்றமையை உணர முடிந்தது.

ரெலொ எம்.பியான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி சாணக்கியனை கரித்துக் கொட்டிக் கொண்டிருந்தார். சாணக்கியனின் திட்டத்திற்கு இவ்வளவு ஒதுக்கீடா என்பதை ஜனாவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லைப் போலும். அவரின் வயிறு பற்றி எரிந்தமையை அந்தச் செய்தியாளர் மாநாட்டில் உணர முடிந்தது.

இது குறித்து சாணக்கியன்

05▶




# அரச சொத்துக்களை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவுறுத்தல்

பதவியில் இருந்து விலகிய அதிகாரிகள் தொடர்ந்தும் பயன்படுத்தும் அரச சொத்துக்களை மீளப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், உள்ளூராட்சித் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களுக்கு இது தொடர்பான கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தமது பதவிக் காலத்தில் வழங்கப்பட்ட அரச சொத்துக்களை சிலர் சட்டவிரோதமாக பயன்படுத்துகின்றனர் என முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறான சொத்துக்களை உடனடியாக மீளப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு லஞ்ச ஊழல் ஆணைக்குழு அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளது.

பொதுச் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவோருக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுமென ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.




# கிராம உத்தியோகத்தர்கள் நாடளாவிய ரீதியில் இன்றும் நாளையும் கடமைகளிலிருந்து விலகல்

நாடளாவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர்கள் இன்றும் நாளையும் (திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில்) கடமைகளில் இருந்து விலகி இருப்பார்களென கிராம உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

அதேசமயம் நாளை முதல் ஒரு வார தொழிற்சங்க போராட்டத்தை கிராம சேவகர்கள் முன்னெடுப்பார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தமது தொழில்சார் நடவடிக்கையால் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரச சேவையின் ஏனைய சேவைகளுடன் முரண்படாத வகையில் கிராம சேவகர் சேவையில் உள்ள பிரச்சினைகளுக்கு சாத்தியமான தீர்வுகளை முன்வைக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பணிப்புரை விடுத்திருந்தார்.

ஆனாலும் கிராம சேவகர்களின் சம்பள முரண்பாடு, பதவியுயர்வு, சேவையாப்பு தொடர்பான பிரச்சினைகள் தற்போது தொடர்ந்தே வண்ணமே இருக்கின்றன எனக் கிராம சேவை உத்தியோகத்தர் சங்கம் வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வியாழன் வேட்பு மனு ஏற்பை ஒட்டி விசேடமான பாதுகாப்பு ஏற்பாடுகள்

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் செய்யும் தினமான எதிர்வரும் 15 ஆம் திகதி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப் படவுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய இந்த விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்த பாதுகாப்பு திட்டங்களுக்கு விசேட அதிரடிப்படையினரின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல் அலுவலகத்தை அண்மித்த வீதிகளில் எதிர்வரும் 15 ஆம் திகதி விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப் படவுள்ளது.

இதேவேளை, வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் வேட்பாளர்களுடன் வருகைதரும் பிரதிநிதிகளின்எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.




ஜனாதிபதி வேட்பாளருடன் கட்சியின் செயலாளர் உட்பட இருவர் மாத்திரமே வேட்புமனு ஏற்கும் அலுவலகத்திற்குள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்படுவர் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவர்களைத் தவிர மேலும் மூவர் தேர்தல் அலுவலக வளாகத்திற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.



# திருமலை தென்னவன் மரபு அடி கிராமத்தில் நான்கு குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு





**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

"சமூகங்களைக் கட்டியெழுப்புதல்" திட்டத்தின்கீழ்பிளஜ்டுடெஸ்டோபௌண்டேசன் நிதி அனுசரணையுடன் ஜீவ ஊற்று அன்பின் கரத்தின் இணைப்பாக்கத்தில், சொந்த வீடுகள் இல்லாது வாழ்ந்து வந்த நான்கு குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை கையளிக்கும் நிகழ்வு திருகோணமலை மாவட்டத்தின் எல்லைக் கிராமமாகிய தென்னவன் மரபு அடி கிராமத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை நகரில் இருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தில் வசித்து வருகின்ற பொதுமக்கள் இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த பின்னர் போதுமான அடிப்படை வசதிகள் இன்றி தினமும் புறக்கணிக்கப்படும் நிலையில் தமது வாழ்க்கையை நடத்திவந்தனர். அம் மக்களுக்கான உதவித்திட்டமாக இது அமைந்துள்ளது என்பது விசேட அம்சமாகும்.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் குணநாதன், பௌண்டேசனின் ஸ்தாபகரும் தேசிய இயக்குனருமாகிய (ஆஸ்திரேலியா) த.உதயன் பத்மநாதன், ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் அமைப்பின் செயலாளர் ஜே.ரி. பிரவின் மற்றும் திருகோணமலை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் அத்தநாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வீடுகளைப் பயனாளிகளுக்கு கையளித்தனர்.

மேலும் இதன்போது தென்னைவன் மரபு அடி கிராம உத்தியோகஸ்த்தர், அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர், கிராம அபிவிருத்தி சங்கம் உறுப்பினர்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஏனைய அமைப்புக்களைச் சார்ந்தவர்கள், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு பாடசாலை மாணவர்களுக்கான பரிசுப் பொருள்களும் சிறப்பு விருந்தினர்களுக்கான நினைவுப் பரிசுகளும் இதன்போது வழங்கி வைக்கப் பட்டன.



# பூநகரியில் கோர விபத்து இளைஞர் பரிதாபமாக பலி

யாழ்ப்பாணம் பூநகரி நேற்று பகுதியில் ஏற்பட்ட கோர விபத்தில் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

அதிவேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தியமையே விபத்துக்குக் காரணம் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தமிழரசுக் கட்சி வழக்குக்கு சுமுகத் தீர்வு காண வாய்ப்பு

## நேற்று எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு




(ந.லோகதயாளன்)

தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கில் விளக்கத்துக்கு முன்னான கலந்தாய்வு ஒக்டோபர் 14 ஆகும். அந்தக் கலந்தாய்வில் வழக்காளி தரப்போடும் இணங்கித் தீர்வு காண்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது ஏற்பட்டிருக்கின்றன.

– இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றைய தினம் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன் நிறைவில் செய்தியாளர்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:–

இன்று (நேற்று) இரு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தோம். ஒன்று கட்சிக்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கின்ற வழக்கு சம்பந்தமாக நீண்ட நேரம் ஆராய்ந்து இதனை விரைவில் முடிவுறுத்த இருக்கும் உபாயம் தொடர்பில் பேசினோம். ஏற்கனவே மத்தியகுழு, அரசியல் குழு என்பவற்றுடன் சட்டத்தரணிகள் மட்டத்திலும் இது இடம்பெற்றிருக்கின்றது.

இதன் அடிப்படையில் வழக்காளி கோரிய பிரதான நிவாரணங்களை வழங்குவதென்று மாவட்ட நீதிமன்றிலும் கூறிவிட்டோம்.

பொதுச் சபையின் சேர்மானம் எப்படியிருக்க வேண்டும் என்பது குறித்து இப்போது ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கின்றது. அதில் அம்பாறையில் 3 அல்லது 4 தொகுதி என்பதன் அடிப்படையில் 156 அல்லது 161பேர் பொதுச் சபை உறுப்பினர் என யாப்பின் அடிப்படையில் இணங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலான பொதுச் சபையை கூட்டி, சில முன்னெடுப்புக்களை மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றோம். ஒக்டோபர் 14 இல் – விளக்கத்திற்கு முன்னரான கலந்தாய்வு இடம்பெறும் போது, அதிலே வழக்காளி தரப்போடும் இணங்கித் தீர்வு காண்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது ஏற்பட்டிருக்கின்றன. – என்றார் அவர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.பியுடன் தொடர்பு கொண்டு கேட்டேன்.

“ஆம். நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தேன். ‘சாராய பார் பெர்மிட்டுகள்’ தரவா என்று கேட்டார். நான் ‘வேண்டாம், மக்கள் நலன் திட்டங்களைத் சமரர்ப்பிக்கிறேன். அவற்றை அங்கீகரித்து நடைமுறைப் படுத்துங்கள்!’ என்றேன். அதனால் அதற்கு இணங்கி நான் சமர்ப்பித்த திட்டங்களுக்கு அவர் அங்கீகாரம் தந்திருக்கின்றார். நானும் சாராய பார் பெர்மிட் பெற்றிருந்தால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் ஜனா போன்றோருக்குக் கிடைத்த மாதிரி எனக்கும் 5 கோடி ரூபாத் திட்டங்களுடன் நின்றிருக்குமோ என்னவோ...! நான் எமது முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், கட்சி பிரமுகர்கள், ஆதரவாளர்கள் எல்லோரதும் யோசனைத் திட்டங்களை வாங்கி, நூற்றுக்கணக்கில் ஜனாதிபதிக்கு அனுப்பினேன் இந்தத் திட்டங்களுக்கு ஜனாதிபதி அங்கீகாரம் அளித்து நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார் என்று நினைக்கிறேன். நான் அனுப்பிய திட்டங்களின் பெறுமதி 60 கோடி ரூபா வரை இருக்கலாம். ஆனால் இதுவரை 40 கோடி ரூபா வரை பெறுமதியான செயல் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. மிகுதி பின்னர் கிடைக்குமோ என்னவோ. கிடைக்கும் என்று ஆவலோடு நம்புவோம்!” - என்று விளக்கத்தை முடித்தார் சாணக்கியன் எம்.பி.

## ஐயம்புதியும் சஜித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ பக்கம் இணைந்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசின் கீழ் 19 ஆவது அரசமைப்பு திருத்தம் மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளின் சிற்பியாகச் செயற்பட்டவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது

## அரியநேத்திரன் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில், ஒரு வாரத்துக்குள் பதில் கிடைக்கக் கூடியதாக விளக்கமளிக்கும்படி அரியநேத்திரனுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தவும், அவரது நியாயமான விளக்கம் கிட்டும் வரை கட்சியின் எந்த நிகழ்வுக்கும் - எந்தக் கூட்டங்களுக்கும் - அவரை அழைக்காமல் விடவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றைய தினம் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதன் நிறைவில் தலைவர் மாவை.சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சிரேஷ்ட உப தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் இணைந்து செய்தியாளர்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே சுமந்திரன் மேற்படி தகவல்களை வெளியிட்டார்.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடினோம். இதிலே பிரதான வேட்பாளர்களாக இன்று கருதப்படுகின்ற மூவரில் இருவரான சஜித் பிரேமதாஸ மற்றும் அநுர குமார திஸநாயக்க ஆகியோர் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பணிமனைக்கு வந்து எமது தலைவர்களோடு பேச்சு நடாத்தியுள்ளனர். இது தொடர்பில் ஊடகங்களிற்கும் கருத்துக் கூறினர். இதேநேரம் சுயேச்சை வேட்பாளரான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் கட்சித் தலைவர் மாவை.சேனாதிராஜாவை சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போது ஓர் பத்திரத்தையும் கையளித்துள்ளார்.

எமது பெரும்பான்மையானோரின் நிலைப்பாடு - இவர்கள் அனைவரும் முன் வைத்த கருத்து, இவர்கள் முன் வைத்த விடயங்கள் எமது அரசியல் அபிலாசைகளை எட்டுவனவாக இல்லை என்பதாகும். இதனை நாம் அவர்களுக்கும் சொல்லியிருக்கின்றோம். இதேநேரம் நேற்று முன்தினம் நாமல் ராஜபக்ஷ் எனது வீட்டிற்கு வந்து எமது கட்சியுடன் பேச வேண்டும் எனக் கோரினார். அதனையும் ஆராய்ந்து சந்திக்க வேண்டுமானால் சந்திப்போம். எவரைச் சந்திக்கவும் நாம் பின் நிற்கவில்லை. தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டை வெளிப்படையாகக் கூறுவோம்.

இது தொடர்பில் இன்று (நேற்று) எடுத்த முடிவும் அப்படியாகவே இருக்கின்றது. அனைத்து வேட்பாளர்களிற்கும் நாம் பகிரங்கமாக கூறுவது தமிழ் மக்கள் சார்பில் - தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினுடைய நிலைப்பாடானது இணைந்த வடக்கு கிழக்கிலே சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வுடனான ஓர் ஆட்சி முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான். இது எமது அரசியல் நிலைப்பாடாகும்.

எம்மிடம் பேச வருகின்ற அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களிற்கும் இதனை நாம் கூறுகின்றோம். இதற்கு யாராவது இணங்கி வந்தால் ஆதரவளிக்கலாம் எனவும் கூட்டத்திலே சொல்லப்பட்டது. தீர்மானம் ஒன்றும் எடுக்கவில்லை. இந்தக் கருத்து வந்தது. தமிழ்ப் பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்துவது என்று சில அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்பு எனச் சொல்லப்படுகின்ற சிலரும் அறிவித்திருக்கின்ற நிலையில் இது இன்றைய (நேற்று) கூட்டத்தில் அலசி ஆராயப்பட்டது. இதற்கு முனபும் இது தொடர்பில் இரு தடவை பேசியுள்ளோம். கடந்த கூட்டத்திலே அரியநேந்திரனும் சமூகமாக இருந்தார் அப்போது இது தொடர்பில் தீர்மானம் எடுக்கவில்லை எனச் சொல்லியிருந்தோம்.

இப்போது இவ்விடயம் தொடர்பிலே எமது கட்சியின் உறுப்பினர்களோடும், மக்களோடும் தொடர்ந்து கலந்துரையாடுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. இதற்கு ஆதரவா அல்லது எதிர்ப்பா என்கின்ற தீர்மானத்தை எடுக்கவில்லை.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல் குழு உறுப்பினரான அரியநேந்திரன் கட்சியை கலந்து ஆலோசிக்காமல் தன்னை வேடபாளராக இதர கட்சிகளோடும் பொது அமைப்புக்களோடும் சேர்ந்து அறவித்தமை தொடரபாக அவரிடம் விளக்கம் கோருவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவரது விளக்கத்தை கட்சிக்கு வழங்க ஒரு வார கால அவகாசமும் வழங்கப்படுகின்றது. அது வரைக்கும் கட்சி நிகழ்வுகளிற்கு அவருக்கு அழைப்பு விடுப்பதில்லை என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது. - என்றார்.

## சமஷ்டிக்கு இணங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாம் அடிக்கடி சொல்லி வரும் விடயம். எமது 80 ஆண்டு கால அரசியல் கொள்கையை நிலை நிறுத்துவதற்கு தெளிவான கொள்கையை நிலை நிறுத்தித் தென்னிலங்கை வேடபாளர் யார் முன் வந்தாலும் அதனை நாம் பரிசீலிப்போம்.

பொது வேட்பாளர் தொடர்பில் கட்சியில் ஒத்த, எதிர்க் கருத்துக்கள் உண்டு. நான் ஆதரவாக எனது கருத்தைப் பதிவு செய்துள்ளேன். சரியான விடயத்தை தென்னிலங்கை வேட்பாளர்கள் முன் வைத்தால் அது தொடர்பில் பரிசீலிக்கவும் தயார்.

அதில் பொது வேட்பாளர் தொடர்பிலும் ஆராய்ந்து முடிவு அறிவிக்கப்படும். - என்றார்.

# இந்தியாவில் இருந்து 3 கோடி முட்டைகள்!



மூன்று கோடி இந்திய முட்டைகளில் முதல் தொகுதி இம்மாதம் இறக்குமதி செய்யப்படும் என இலங்கை அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இவ்வருடம் முட்டை இறக்குமதி செய்வது தொடர்பான கொள்முதல் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என இலங்கை அரச வர்த்தக பல்நோக்கு கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிறி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

வற் உள்ளிட்ட அரசாங்க வரிகளை செலுத்தி முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டு அந்த முட்டைகள் லங்கா சதொச ஊடாக பொதுமக்களுக்கு பழையபடி விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் சந்தையில் ஒரு முட்டை 50 ரூபாய்க்கு மேல் விற்பனையாகி வருவதால் மீண்டும் முட்டை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

# நமது கருத்து

## அதிரடி மாற்றங்கள் நடக்கலாம்

ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்ய இன்னும் மூன்று நாள்களே உள்ளன.

இத்தேர்தலின் பிரதான வேட்பாளர்கள் யார் என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ; தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்க, பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்ஷ ஆகியோரே அவர்கள்.

தேர்தல் களத்தில் சரத் பொன்சேகா, விஜயதாஸ ராஜபக்ஷ, ரொஷான் ரணசிங்க என்று மேலும் பலர் இருந்தாலும் அவர்கள் பிரதான வேட்பாளர்கள் அல்லர்.

அரசியல் தரப்புக்கள் கன்னை பிரிந்து, அணிகள் சேர்ந்து, நிலை எடுத்து விட்டாலும் கூட, இன்னமும் கூட்டுக்கள் பலவும் இறுதி செய்யப்படவில்லை என்பதுதான் கள நிலைமை.

ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக் கட்சி, பட்டலி சம்பிக்க ரணவக்கவின் தரப்பு போன்ற பல குழுக்களின் நிலைப்பாடு இன்னும் வெளியாகவில்லை.

அந்த வகையில் பார்த்தால் ஜீவன் தொண்டமான் - செந்தில் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி கூட இன்னமும் தன் நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. இன்றுவரை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பக்கம் கட்சி இருந்தாலும் அதன் உத்தியோகபூர்வ அறிவிப்பு இனித்தான் வர வேண்டும்.

அதேசமயம் ஏற்கனவே ஒவ்வொரு தரப்புடனும் அணி சேர்ந்து, கன்னை கட்டி விட்டவர்கள் என்று தெரிவித்த பல கட்சியினரும் குழுக்களைச் சேர்ந்தவர்களும் பிரமுகர்களும் கூட, கடைசி நேரத்தில் குத்துக்கரணம் அடிப்பதற்குத் தாராளமாக வாய்ப்பிருப்பதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

வழமைக்கு மாறாக இம்முறை நான்கு முனைப் போட்டி. அதனால் போட்டி மிக நெருக்கடியானது என்பது கண்கூடானது.

எந்த வேட்பாளரும் தனித்து ஐம்பது வீத வாக்குகளை எட்டுவதற்கான வாய்ப்பு அடியோடு இல்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

அதனால் இந்தத் தடவை வழமைக்கு மாறாக இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கை தவிர்க்க முடியாத கட்டாயமாக இருக்கும்.

அந்தளவு தூரம் போட்டி மிக நெருக்கமானது; இழுபறியானது.

இத்தகைய தேர்தல்களில் கடைசி நேர குத்துக்கரணங்கள் எதிர்பாராத மாற்றங்களை - அதிர்ச்சிகளை - கொண்டுவரக் கூடியவை.

அப்படியான அதிர்ச்சியான நிலைமைகள் காத்திருக்கின்றன என விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

தேர்தல் முடிவுகளையே கடைசி நேரத்தில் புரட்டிப் போடப் போகின்ற - அதிர்ச்சிகளைத் தரக் கூடிய - குத்துக்கரணங்களுக்கான வாய்ப்புகள் திரண்டு வருகின்றன என விடயம் அறிந்த வட்டாரங்கள் சில கூறுகின்றன.

கடைசி நேரத்தில் இடம் பெறக் கூடிய அந்தர் பல்டிகள் தேர்தலின் போக்கையே அடியோடி மாற்றி அமைத்து விடும் என்ற எதிர்பார்ப்போடு சில தரப்புகள் காத்திருக்கின்றன என்றும் தகவல் வெளியாகி இருக்கின்றது.

மக்கள் இலகுவில் நம்ப முடியாத அணி மாற்றங்களுக்கான அதிசயங்கள் காத்திருக்கின்றன என்கின்றன அந்த வட்டாரங்கள்.

தென்னிலங்கையில் அத்தகைய அதிரடி அரசியல் மாற்றங்கள், பாய்ச்சல்கள், குத்துக்கரணங்கள் நேர்ந்தால் அவை தமிழர் அரசியலிலும் காத்திரமான பாதிப்பை - பங்களிப்பை - ஏற்படுத்தும் என்பதும் மறுக்கற்பாலதல்ல.

# தமிழ் நாட்டு கடற்றொழிலாளர்கள் கைது; எஸ்.ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்



இலங்கையில் கைதான கடற்றொழிலாளர்கள் மற்றும் அவர்களது கடற்றொழில் படகுகளை விடுவிக்கவும், அவர்களை மீட்கவும் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 35 கடற்றொழிலாளர்கள் 4 நாட்டுப் படகுகளுடன் கடந்த வியாழக்கிழமை இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதை அடுத்து இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனினும் ஜெய்சங்கரிடம் இருந்து இன்னும் பதில்கள் கிடைக்கவில்லை.

இதற்குள் கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையின் புத்தளம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட இந்த 35 பேரும், ஓகஸ்ட் 21 வரை நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டு வாரியபொல சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் அனுப்பியுள்ள கடிதத்தில், இலங்கை கடற்படை கப்பல் மோதியதில் இரண்டு தமிழக கடற்றொழிலாளர்கள் கொல்லப்பட்டதை நினைவு கூர்ந்துள்ளார்

எனினும் இந்த விடயத்தில் குறிப்பிடத்தக்க நிவாரணம் வழங்கப்படாமை வருத்தமளிக்கிறது என்று ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதற்கு மத்தியில் தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்களை உடனடியாக விடுவிப்பதற்கும், இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கும் நிரந்தரமான தீர்வை ஏற்படுத்துவதற்கு வலுவான இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் ஜெய்சங்கரிடம் வலியுறுத்தியுள்ளார்.

# பாம்பனில் நாட்டுப்படகு கடற்றொழிலாளர் சங்கம் காலவரையற்ற பணிப்புறக்கணிப்பு போராட்டம்





எல்லைத்தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள 35 கடற்றொழிலாளர்களையும் மத்திய அரசு உடனடியாக விடுவிக்கக் கோரி பாம்பனில் நாட்டுப்படகு கடற்றொழிலாளர் சங்கம், நேற்று முன்தினம் முதல் காலவரையற்ற பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் இந்திய ஊடகங்களுக்கு தகவல் அளித்துள்ள சங்கத் தலைவர் எஸ்.பி. ராயப்பன், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் பிற தலைவர்களைச் சந்திக்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே இந்திய அரசாங்கம், சம்பவங்கள் தொடர்பில் தமது எதிர்ப்பை இலங்கையிடம் வெளியிட்ட பின்னரும், புதிய சம்பவங்கள் கடற்றொழிலாளர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது மத்திய அரசு ஆதரவளித்து, நாட்டை விட்டு வெளியேறிய மக்களுக்கு தமிழக அரசு அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் நேரத்தில், தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்களை பொய்யான குற்றச்சாட்டுக்களின் கீழ் நடத்துவது நியாயமற்றது மற்றும் துரதிஸ்டவசமானது என்றும் அவர் கூறியுள்ளார்.









# இஸ்ரேலின் தாக்குதலில் 500 இற்கும் மேற்பட்ட மருத்துவத்துறையினர் பலி


காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலினால் இதுவரை 500 இற்கும் மேற்பட்ட மருத்துவத்துறையினர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீன சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இதுவரை 310 இற்கும் அதிகமான சுகாதாரத் துறையினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 130 நோயாளர்காவு வண்டிகள் இஸ்ரேலிய படைகளால் அழிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.









# டொனால்ட் ட்ரம்பின் தேர்தல் பிரசாரத்தில் ஊடுருவியது ஈரான்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தேர்தல் பிரசாரம் ஊடுருவல் செய்யப்பட்டுள்ளதாகவும், ஈரானிய தரப்பினர் முக்கிய உள் ஆவணங்களைத் திருடி விநியோகிப்பதில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் ஈரானின் ஈடுபாட்டிற்கான குறிப்பிட்ட ஆதாரங்களை, ட்ரம்பின் பிரசார பிரிவு வழங்கவில்லை.

இருப்பினும் 2024 இல் அமெரிக்க பிரசாரத்தில் தலையிட வெளிநாட்டு முகவர்களின் முயற்சிகளை விபரிக்கும் அறிக்கையை மைக்ரோசாப்ட் வெளியிட்ட ஒரு நாளுக்குப் பின்னர் இந்த குற்றச்சாட்டு வெளியிடப்பட்டுள்ளது.

ட்ரம்பின் முன்னாள் மூத்த ஆலோசகரின் மின்னஞ்சல் கணக்கிலிருந்து ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் உயர் அதிகாரிக்கு, கடந்த ஜூன் மாதம் ஈரானிய இராணுவ புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை ஒன்றை அனுப்பிய ஒரு உதாரணம், இந்த குற்றச்சாட்டுக்கு மேற்கோளிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த குற்றச்சாட்டை ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈரானின் பிரதிநிதிகள் மறுத்துள்ளனர்.

இருப்பினும், ஈரான், மத்திய கிழக்கு மற்றும் அதற்கு அப்பால் உள்ள தனது எதிரிகளை குறிவைத்து ஊடுருவல் பிரசாரங்களை நடத்துவதாக நீண்ட காலமாக சந்தேகிக்கப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு ட்ரோன் தாக்குதலில் முக்கியப் புரட்சிக் காவலர் ஜெனரல் காசிம் சுலைமானியைக் கொன்ற ட்ரம்ப் மீது பதிலடி கொடுக்கவுள்ளதாக தெஹ்ரான் நீண்டகாலமாக அச்சுறுத்தி வருகிறது.

இதற்கிடையில் அமெரிக்க நீதித்துறை கடந்த வாரம் ஈரானுடன் உறவு கொண்ட ஒரு பாகிஸ்தானியர் மீதான குற்றவியல் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது.

அமெரிக்காவில் ட்ரம்ப் உட்பட அரசியல் பிரமுகர்களுக்கு எதிராக படுகொலை முயற்சிகளை சதி செய்ததாக, அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# பொலிஸாரின் மோட்டார் சைக்கிள்கள் மோதிய விபத்தில் 3 பொலிஸார் காயம்

## இரத்மலானை பொருப்பன பிரதேசத்தில் சம்பவம்

இரத்மலானை , பொருப்பன பிரதேசத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட மூன்று பொலிஸார் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என கல்கிஸ்ஸை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், அவரது மனைவியான கல்கிஸ்ஸை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் மற்றும் கல்கிஸ்ஸை பொலிஸ் நிலைய விசேட பணியகத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளுமே இவ்வாறு விபத்தில் காயமடைந்துள்ளனர்.




கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவு கான்ஸ்டபிள் அவரது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது கல்கிஸ்ஸை பொலிஸ் நிலைய விசேட பணியக கான்ஸ்டபிள், பிலியந்தலை பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

# விஞ்ஞாபனத்தை 26 ஆம் திகதி தேசிய மக்கள் சக்தி வெளியிடும்



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான விஞ்ஞாபனம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

இந்தத் தகவலை அக்கட்சியின் தலைவரான ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனமும் மாத இறுதிக்குள் முன்வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனமும் இறுதிப் படுத்தப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.



# 1,700 ரூபா சம்பள விவகாரம் தொடர்பில் மீண்டும் கூடுகிறது சம்பள நிர்ணய சபை

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள நிர்ணயத்துக்காக இன்று சம்பள நிர்ணய சபை மீண்டும் கூடவுள்ளது.


இதன்போது 1,700 ரூபா நாளாந்த சம்பளத்தை பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகளை எடுக்கவிருப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

தற்போது ஜனாதிபதியே தொழில் அமைச்சராகவும் இருக்கின்ற நிலையில், இது சார்ந்த அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும் என்று எதிர்பார்ப்பதாக அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும் ஏலவே 1,700 ரூபா நாளாந்த சம்பளத்தை நிர்ணயித்து வெளியிடப்பட்ட வர்த்தமானியிலிருந்த குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு, புதிய யோசனை நாளையதினம் முன்வைக்கப்படும் என்றும் செந்தில் தொண்டமான் குறிப்பிட்டார்.

# தொலைபேசி, கணினிகள் பறிமுதல் ஒரு கோடி ரூபா பெறுமதியுடையவை






சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மடிக்கணினிகளை சட்ட விரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டுவந்த 3 விமானப் பயணிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு – தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த 40 முதல் 45 வயதுக்குட்பட்ட வர்த்தகர்கள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை டுபாயில் இருந்து வந்த இவர்களிடம் இருந்து 36 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 6 மடிக் கணினிகள் மீட்கப்பட்டுள்ளன என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# வாகன இறக்குமதி மேற்கொண்டால் நாட்டில் வெளிநாட்டு நாணய ஒதுக்கம் குறைவடையும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

"வாகன இறக்குமதியால் நாட்டில் வெளிநாட்டு நாணய ஒதுக்கம் குறைவடையும். எனினும் அதற்காக வாகனங்களை இறக்குமதி செய்யாமல் இருக்க முடியாது."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் வர்த்தகத்துறையினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டுக்கு வாகனங்கள் இறக்குமதி செய்ய ஆரம்பிக்கப்பட்டால், வெளிநாட்டு ஒதுக்கங்களும் குறைவடையும்.

தற்போது நாட்டில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்த பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவர்களுடன் 6 மாதங்களுக்கு ஒருமுறை பேச்சு நடத்துகிறோம். அவர்களுடன் ஒத்துப் போகின்ற விடயங்களும் உள்ளன. ஒத்துப் போக முடியாத விடயங்களும் உள்ளன.

அரசாங்கத்துக்கு அதிகமான வருமானம் கிடைக்கின்ற விடயமாக, வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் போது விதிக்கப்படுகின்ற வரிகளே இருக்கின்றன.

அத்துடன், வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டால் உள்நாட்டு உற்பத்திகள் அதிகரிக்கும்.

எனவே வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் போது வெளிநாட்டு ஒதுக்கங்கள் குறைவடைந்து, பின்னர் அதிகரிக்க வேண்டும் என்ற நிலையிலேயே நாம் இருக்கிறோம்."– என்றார்.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை மேலும் உயர்வு



இந்த மாதத்தின் முதல் 4 நாள்களில் மாத்திரம் 26 ஆயிரத்து 889 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட தரவுகளுக்கமைய, இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், 12 லட்சத்து 24 ஆயிரத்து 948 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அதற்கமைய, இந்தியா, ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மன், சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# எகிப்திய வெளிவிகார அமைச்சரை கெய்ரோவில் சந்தித்தார் அலி சப்ரி







எகிப்திய தலைநகர் கெய்ரோவில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் அந்த நாட்டின் வெளிவிகார அமைச்சர் பத்ர் அப்தெலாட்டி ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வருடம் கொழும்பில் இடம்பெற்ற வெளியுறவு அமைச்சர்கள் மட்ட இரண்டாவது சுற்று அரசியல் ஆலோசனை கூட்டத்தின்போதான இருதரப்பு ஒத்துழைப்பு வழிமுறைகளையும் எகிப்திய வெளிவிவகார அமைச்சர் பத்ர் அப்தெலட்டி இதன் போது பாராட்டியுள்ளார்.

கடந்த வருட இறுதியில் எகிப்து மற்றும் இலங்கை நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தை இலங்கை மீண்டும் ஆரம்பித்ததையும் அவர் வரவேற்றுள்ளார்.

இலங்கையின் பிரதான நிறுவனங்களின் ஆயத்த ஆடைத் துறையில் முதலீடுகளைப் பாராட்டிய அவர் இலங்கை முதலீட்டாளர்களை உற்பத்தித் துறையில் அதிக நம்பிக்கைக் குரிய முதலீட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள அழைப்பு விடுத்துள்ளார்.

அதேநேரம் பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் எகிப்துடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் இலங்கையின் அர்ப்பணிப்பையும் ஆர்வத்தையும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளார்.




# தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் புதிதாக ஆள்சேர்ப்பு நடப்பதாகப் போலிச்செய்தி

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் புதிதாக ஆள்சேர்ப்பு இடம்பெறுவதாக சமூக வலைத்தளங்கள் மற்றும் வட்ஸ்அப் குழுக்களில் பகிரப்படும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பகிரப்படும் செய்திகளில் எந்தவித உண்மைத் தன்மையும் இல்லை என்பதுடன், இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு ஒன்றையும் விடுத்துள்ளது.

அதில், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் புதிதாக ஆள்சேர்ப்பு இடம்பெறுவதாகப் பகிரப்படும் தகவலில் எந்தவித உண்மையும் இல்லை எனவும், சரியான மற்றும் உண்மையான செய்திகளை அறிந்து கொள்ளத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ ஊடகங்களின் ஊடாக இணைந்திருங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்ததன் பின்னர் ஜனாதிபதியைச் சந்திப்பதைப் பரிசீலிக்கலாம்!

## தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஊடக அறிக்கை

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், உரிய முறையில் அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில், ஜனாதிபதியை சந்திப்பதைப் பரிசீலிக்கலாம் என தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஊடகப் பிரிவு நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

தமிழ்ப் பொது வேட்பாளரின் பெயர் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், 09.08.2024 அன்று, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலகத்திலிருந்து தமிழ்ப் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும், தமிழ் மக்கள் பொதுச் சபையின் உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் - ஆகியோரை, ஜனாதிபதி சந்திக்க விரும்பம் கொண்டுள்ளார் எனவும், சந்திப்பில் பங்குகொள்வதை உறுதிப்படுத்துமாறும் கோரி, ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து, தொலை பேசி மூலம், அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் பொதுக் கட்டமைப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான பணிகளை முன்னெடுத்துவரும், இவ்வாறானதொரு காலப்பகுதியில், ஜனாதிபதியைச் சந்திப்பதன் பொருத்தப்பாடின்மையைக் கருத்தில் கொண்டு, வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர், உரிய முறையில் அழைப்பு விடுக்கப்படும் பட்சத்தில், இதனை பரிசீலிக்க முடியுமென்றும் பொதுக் கட்டமைப்பு தீர்மானித்திருக்கின்றது.



ஜனாதிபதி விக்கிரமசிங்கவிற்கு, நாட்டின் தலைவர் என்னும் ஒரு பரிமாணம் இருக்கின்ற போதும் மறுபுறமாக, அவர் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவர் என்பதையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஊடகங்களில் பொதுக் கட்டமைப்பிற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக வெளிவரும் செய்திகளை கருத்தில் கொண்டே, இந்த அறிக்கையை நாம் வெளியிடுகின்றோம். அச் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை.

தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கொள்கையடிப்படையில் ஏற்றுக் கொண்டிருக்கும் ஏழு அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு அமைவாக, தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை வெற்றிகொள்ளும் நோக்கில், எந்தவொரு அதிகார தரப்புடனும் உத்தியோகபூர்வமாக பேசுவதற்கான கதவை நாம் திறந்தே வைத்திருக்கின்றோம். ஆனால் தற்போதுள்ள உடனடிப் பணிகளுக்கு மத்தியில், அவ்வாறான சந்திப்புக்களை மேற்கொள்ளக் கூடிய ஏதுநிலையில் நாம் இல்லை. இந்த அடிப்படையிலேயே குறித்த சந்திப்பை நாம் தவிர்த்திருக்கின்றோம். இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுமிருக்கின்றோம்.

பதின்நான்கு பேர் கொண்ட, தமிழ் பொதுக் கட்டமைப்பில் ஏழு பொதுச் சபை உறுப்பினர்களும், ஏழு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அங்கம் வகிக்கின்றனர். குறிப்பிட்ட ஏழு கட்சிகளில், மூன்று கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் பொதுக் கட்டமைப்பிற்கான கூட்டுப் பொறுப்பிற்கு உரித்தானவர்களாக இருந்தாலும் கூட, மக்கள் பிரதிநிதிகள் என்னும் வகையில், அரச தலைவரைச் சந்திக்க வேண்டிய தேவைகள் ஏற்படலாம், அதே போன்று கட்சிகளுக்கான சுயாதீனத்தின் அடிப்படையில் அரச தலைவரை சந்திக்கும் தேவைகளும் இருக்கலாம். அது வழமையான அரசியல் நடைமுறையும் கூட. உதாரணமாக அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் ஒரு குறித்த கட்சி அரச தலைவரை சந்திக்க முயற்சித்தால், அது குறித்த கட்சியின் சுயாதீனமான முடிவாகும் - ஆனால், அவ்வாறான சந்திப்புக்கள் எவையுமே, பொதுக் கட்டமைப்பின் உத்தியோகபூர்வமான பங்குபற்றலாக அமையாது. இது தொடர்பில் பொதுக் கட்டமைப்பு மிகவும் உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது.

# ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் இங்கு பணியில்!





எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு பணிகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றன.

அதன்படி, ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய சட்ட மீறல் மற்றும் வன்முறை தொடர்பில் நேற்று முன்தினம் 51 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டம் மீறல் தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 25 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 26 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.



கலாபூஷணம்
பரீட் இக்பால்,
யாழ்ப்பாணம்.

# இளைஞர்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி!

**இன்று சர்வதேச இளைஞர் தினம். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

நாம் இளைய சமுதாயத்தை மதிக்க வேண்டும். அவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும். இளைஞர் மாநாடு நடத்தி அவர்களை நல்வழிப்படுத்துவது, ஊக்குவிப்பது ஒவ்வொரு நாட்டு தலைவர்களதும் தலையாய கடமையாகும்.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர்களின் பங்களிப்பு அத்தியாவசியமானது என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

உலக சமூகத்தில் இளைஞர்களின் முயற்சி களை அங்கீகரிக்க வேண்டும். தத்தமது சமூகங்க ளுக்கு சாதகமான பங்களிப்பை வழங்கும் வகை யில் அவர்களது செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும்.

15 முதல் 24 வயதுவரையிலான பிரிவினரை இளைஞர்கள் என்று ஐ. நா. வரையறுக்கிறது. கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் போன்றவற்றில் ஒவ்வொரு அரசும் இளைஞர்களுக்கு சரியான, பொருத்தமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இன்று ஒவ்வொரு நாட்டிலும், அந்நாட்டின் வளர்ச்சிக்கு, இளைஞர்களின் பங்களிப்பு இன்றி யமையாததாக உள்ளது. ராணுவம், விளையாட்டு, தொழில்நுட்பம், வியாபாரம் என அனைத்துத் துறை களிலும் இளைஞர்களே சாதித்து வருகின்றனர்.

ஒரு நாட்டின் எதிர்காலமானது, இளைஞர்க ளின் கையில்தான் தங்கியுள்ளது. இளைஞர்களின் வளர்ச்சி, நாட்டின் வளர்ச்சி ஆகும். இத்தகைய வலிமை படைத்த இளைஞர்களை, ஒவ்வொரு அரசும் ஆக்க பூர்வ பணிகளில் ஈடுபடுத்த வலியு றுத்த வேண்டும்.

மனிதனின் வளர்ச்சிக் கட்டங்களைக் கொண்டு மட்டுமல்லாது, பல சிறப்பியல்புகளைக் கொண் டும் தனித்துவமான சமுதாயமாக அடையாளம் காணப்படுபவர்கள் இளைஞர்கள்.

பல வேறுபாடுகளுக்கு அப்பால், வேறுபட்ட பிரதேச, இன, கலாசார எல்லைகளைக் கடந்து அவர்களுக்கென்று தனித்துவமான சமுதாய உறுப்புரிமையும், இயலுமையும் இருக்கின்றது. இதனாலேதான் தேசிய ரீதியில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் இவர்கள் குறித்த கவனம் மேலோங்கியுள்ளது.

வருடாவருடம் ஓகஸ்ட் 12 ஆம் திகதி 2000 ஆம் ஆண்டு முதல் சர்வதேச இளைஞர் தினம் நினைவு கூரப்பட்டு, இளைஞர் சமுதாயத்துக் கான கொள்கை ரீதியான புதிய சிந்தனைகள் முன் வைக்கப்படுவதையும் தொடர்ந்து அவதானித்து வருகின்றோம்.

2024 இற்கான சர்வதேச இளைஞர் தின தொனிப்பொருள் "நிலையான வளர்ச்சிக்கான இளைஞர்களின் முன்னேற்றத்துக்கு டிஜிட்டல் பாதைகள் ஊடாக வெற்றி கொள்வோம்" என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று கற்றலுக்கான வாய்ப்புக்கள் அதிகரித் துத்தான் உள்ளது. நல்ல விடயமாக இருந்தாலும், கெட்ட விடயமாக இருந்தாலும் அறிவைப் பெற்றுக் கொள்ளும் வழிகள் திறந்தே கிடக்கின்றன. ஆனால் அது எல்லா இளைஞர்களுக்கும் கிடைப்பதாக இல்லை. அதேவேளை எல்லா இளைஞர்களுக்கும் எல்லாக் கல்விக்கான வாய்ப்புக்களும் கிடைப்பதாக இல்லை. இதனால் அவர்கள் தமது கற்றலுக்கான தளத்தைத் தெரிவு செய்து கொள்வதில் தோற்று விடுகின்றனர். கற்றலுக்கான வாய்ப்புக்கள் இருந்த போதும் அதனைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இளைஞர்களுக்கிடையே குறைந்து கொண்டு போவதைக் காணலாம். உதாரணமாக நவீன கணனி வலையமைப்பில் எத்தனையோ அம்சங்கள் இருக்க நாள் முழுவதும் நண்பர்களைத் தேடும் இணையத் தளங்களில் மட்டும்தான் இளை ஞர்கள் இணைந்திருக்கின்றனர்.

இளைஞர்கள் கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் தகர்த்தெறிந்து விட்டு, நவீன உலகை நோக்கிய இவர்களது பயணத்தில் குற்றச் செயல்களுக்கான வழிகளும், அவற்றின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணமே உள்ளன. அதனைக் குறைப்பதிலும் பார்க்க அதற்கான ஆர்வத்தினை அதிகரிக்கும் வகையில், நவீன தகவல் பரிமாற்ற ஊடக வலையமைப்புக்களும் நவீன தொடர்பு சாதனங்களும் இயங்குவதனையும், எண்ணிக்கையில் அதிகரித்து செல்லுவதனையும் இன்றைய உலகில் காணக் கூடியதாக உள்ளது.

இளைஞர்களில் சிலர் குடிவகை, சிகரெட், பாலியல் துஷ்பிரயோகம், கசினோ, சிறுவர் துஷ்பிரயோகம், களவு, கொலை, வீண் சண்டை, சச்சரவுகள் மற்றும் போதைப் பொருள் உபயோ கிக்கும் பழக்கத்திற்கு ஈடுபடுகின்றனர். சமீபகால மாக பாடசாலை மாணவர்களும் இப் பழக்கத்தில் ஈடுபடுவது அதிர்ச்சியளிக்கிறது.

சிந்தித்துப் பாருங்கள் தீய பழக்கத்தால் பாட சாலை மாணவர்கள், இளைஞர்கள் மட்டுமல்ல தங்களது பாசமிகு குடும்பம், சமூகம் பாதிக்கப் படுகிறது. எனவே இளைஞர்களின் ஒழுக்கத்தை நிலைநாட்டி வீடு, நாடு மற்றும் உலகின் முன்னேறத் துக்காக ஒருங்கிணைவோம்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.08.2024

## மேஷம்

இன்று சுமாரான செயல்களே நடைபெறும் சூழ்நிலை காணப்படும். உங்களுக்கு சாதகமான பலன்கள் காண நீங்கள் திட்டமிட்டு முயற்சி செய்ய வேண்டும். இதனால் சூழ்நிலை சீர்பெறும்.

உங்கள் பணியில் நன்மையான பலன்கள் காண கடினமாக போராட வேண்டும். என்றாலும் இறுதியில் வெற்றி நிச்சயம்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் காண பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

மூட்டு மற்றும் முதுகு வலியால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியமாய் இருக்க குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்க்கவும்.

## ரிஷபம்

இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமின்றி செயலாற்றினால் இழப்புகள் ஏற்படலாம். உறுதியான அணுகுமுறை மூலம் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

சில விஷயங்களில் உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். அனுசரித்து போவதன் மூலம் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்வது கூட கடினமாக உணர்வீர்கள்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.

## மிதுனம்

உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகுமுறையில் தைரியம் மற்றும் உறுதி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் செயல்திறனில் உங்கள் திறமை வெளிப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் கணிசமாகஉயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது.

## கடகம்

உங்களுக்கு சாதகமான நாள். இன்று புதிய மனிதர்களை சந்தித்து அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வீர்கள். புதிய நண்பர்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு இது ஒரு நல்ல அனுபவமாக இருக்கும்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலன்களை பெற்றுத் தரும். பணியில் உற்சாகம் காட்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.இருவரும் சேர்ந்து இனிமையான நேரத்தை கழிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்ல பணத்தை செலவிடுவீர்கள்.

## சிம்மம்

இன்று விழிப்புணர்வும் எச்சரிக்கையும் தேவை. கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட வேண்டும். உங்கள் நன்மதிப்பிற்கு பங்கம் வரும் வாய்ப்பு உள்ளது. எனவே சிறிது விழிப்புடன் இருக்கவும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பிணக்கு கொள்வீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கம் காண முடியும்.

இன்று நிதிநிலைமையில் அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் சிறிது போராட வேண்டியிருக்கும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும் எண்ணெய் உணவு வகைகளை தவிர்த்தல் சிறந்தது.

## கன்னி

இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். பொறுமையாக உங்கள் செயல்களைக் கையாளுங்கள். உணர்ச்சி வசப்படாதீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு கொள்ளாதீர்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். இன்று பணியில் காணப்படும் கடினமான சூழ்நிலைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பணப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. இதனால் உங்களிடம் மகிழ்ச்சியின்மை காணப்படும்.

இன்று உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## துலாம்

இன்று வெற்றி காண்பதற்கு சாதகமான நாள். உங்கள் ஆர்வத்தை பெருக்கும் புதிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணியில் திருப்தி காணப்படும். உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் நிதி நிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க பொறுமை மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறப்பாக செயலாற்றுவதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ள உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள்.இதனால் இருவரிடையேயான பிணைப்பு வலுப்பெறும்.

நிதிநிலைமை எதிர்பார்த்த வகையில் காணப்படாது. பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உரிய நேரத்தில் உணவை உட்கொள்ளவும். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 12.08.2024




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண இன்று முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக செயலாற்றுவதற்கு சாதகமாக இருக்காது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் பிரச்சினை ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். உற்சாகமாக இணைந்து மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க முயல வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்திற்காக மேற்கொள்ளவேண்டிய செலவு குறித்த கவலை காணப்படும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தோள் மற்றும் கணுக்கால் வலி ஏற்படலாம்.




இன்று மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் பயன எிக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். பணியை விரும்பி மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியாக உங்கள் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணப்படும்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று பக்குவமாகவும் புத்திசாலித்தனத்துடனும் சூழ்நிலையைக் கையாள வேண்டும். இந்தப் போக்கு இன்றைய வேறுபாடுகளையும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.

பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும். பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் அதிர்ஷ்டகரமாக இருக்காது. பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

கண் எரிச்சல் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று மகிழ்ச்சிகரமான வாய்ப்பு காணப்படும். மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள் அல்ல.

உங்கள் திறமை மூலம் கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை மூலம் சிறப்பாக செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகலாம்.

இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

